# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.308/2024

DEPOSITION OF WITNESS FOR PW-1

NAME : மதுனிகா

Father/ Husband NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of February 2025.

<u>முதல் விசாரணை</u> :-

இத்துடன் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1. பிரேத கூறாய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ.2. லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.3. குற்ற இறுதியறிக்கை நகல் ம.சா.ஆ.4. இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.5. வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.6. சுடலைகண்ணனின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.7. 1 முதல் 4 மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்கள் ம.சா.ஆ.8 வரிசை (எண்ணம்4). மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு விபத்தை பற்றி நேரடியாக தெரியாது. விபத்து பற்றி காய்கறிக்கடைக்காரர் சங்கர் சொல்லி தெரியும். என் கணவருடன் விபத்து அன்று சங்கரோ அல்லது வேறு யாரோ உடன் பயணம் செய்யவில்லை. என் கணவர் மீனாட்சி மொத்த காய்கறிக்கடையில் என் திருமணத்திற்கு பின்னிட்டு சுமார் 1 ½ வருடங்கள் வேலை பார்த்தார். அவர் அங்கு வேலை பார்த்தார் மற்றும் அவருடைய சம்பளம் எவ்வளவு என்பது குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் கடை உரிமையாளர் சங்கரிடம் இருக்கும். என் மாமனார், மாமியார் தனியாக குடியிருக்கிறார்கள் என்றால் என்னுடன் இருக்கிறார்கள். ஆதார் அடையாள அட்டையில் எல்லோருக்கும் ஒரே முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் அட்டையில் என் அம்மாவிலாசம் உள்ளது. என் மாமனார், மாமியாருக்கு என் கணவரை தவிர ஒரு அக்கா உள்ளார். என் மாமனார் கூலி வேலை பார்த்தார். அவருடைய வருமானத்தை வைத்து என் அத்தையும், மாமாவும் இருந்தார்கள் என்றும் தற்போதும் அவ்வாறே இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட லாரி எந்த காப்பீட்டு நிறுவனத்திலும் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முன்னால் சென்ற வாகனத்தின் பின்புறம் இடதுப்பக்கம் என் கணவர் சென்ற வாகனம் இடித்துவிட்டது என்றால் சரிதான். முன்னால் சென்ற வாகனத்திற்கு தவறான திசையில் என் கணவர் அவருடைய வாகனத்தை ஓட்டிச்சென்று வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. முன்னால் சென்ற மானை பார்த்து டிப்பர் லாரி ஓட்டுநர் திடீரென்று பிரேக் போட்டதால் விபத்து நடந்தது. விபத்து குறித்து காவல்துறைக்கு நான் தகவல் தெரிவித்தாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கையில் யாரும் விபத்தை நேரில் பார்த்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என் கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது என் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமான போலிசார் தயாரித்த மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வரைபடத்தை பார்த்தால் முன்னால் சென்ற

வாகனத்தின் பின்புறம் சென்ற போது என் கணவர் இடதுபுறம் ஓட்டிச்சென்று முந்த முயற்சிக்கும்போது அவருடைய வாகனத்தின் வலதுபுறம் மோதி விபத்து ஏற்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு என் கணவரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3,4 எதிர்மனுதார்களை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.